ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்த

"கன்னியின் காதலி"

—[ராம்நாத் - சேகர் தயாரிப்பு]—

வசனம் ... S. D. சுந்தரம்

பாட்டு இயற்றியவர்கள் { புதுக்கம்பன் பூமி பாலகதாஸ்
கண்ணதாஸன்
K. D. சந்தானம்

சங்கீத அமைப்பு { C. R. சுப்பராமன்
S. M. சுப்பையா நாயுடு

நடன அமைப்பு ... வேதாந்தம் ராகவய்யா

வாத்திய கோஷ்டி... ஜூபிடர் பிக்சர்ஸ்

பாடியவர்கள் ... { M. L. வஸந்தகுமாரி
K. V. ஜானகி
A. P. கோமளா
திருச்சி லோகநாதன்
C. V. V. பந்துலு
K. சாரங்கபாணி

மற்றும் பலர்

டைரக்ஷன் : K. ராம்நாத்

உதவி { S. ராமனுதன்
M. நமசிவாயம்

ஸ்டுடியோ ... { தி சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்
கோயம்புத்தூர்
லெஸீஸ் ஜூபிடர் பிக்சர்ஸ்

ஒளிப்பதிவு	...	W. R. சுப்பராவ்
உதவி		V.K. கோபால் G.K. ராமு
ஒலிப்பதிவு	...	C. V. ராமசாமி
உதவி		P. கோவிந்த காயர் N. சுப்பராவ்
லாபரெட்டரி	...	C. A. சுந்தரராஜ்
உதவி		M. சுப்ரமணியம்
எடிட்டிங்	...	D. துரைராஜ்
உதவி		S. R. சந்திரசேகரன் S. சுப்ரமணியம்
ஸ்டில்	...	K. அனந்தன்

ஆர்ட் டைரக்ஷன் : A. K. சேகர்

செட்டிங்	...	A. J. டோமினிக்
ஆர்ட்டிஸ்ட்	...	V. S. ராவ்
மோல்டிங்	...	M. P. கோவிந்தசாமி N. குமார்
மேக்கப்	...	K. முகுந்தகுமார் K. R. ராகவ்
உதவி		S.R. சுடலை C.V. சங்கரன்
உடைகள்	...	சங்கர்ராவ் நிப்பாத்கார்
உதவி		T. A. மோதி T. A. மாதவன் S. நடராஜன்
ப்ரொடக்ஷன்	...	G. மணி [ஸ்டுடியோ] C. சுந்தரம் [ப்ரொடக்ஷன்]

நடிகர்கள் :

வசந்தகுமார்	...	S. A. நடராசன்
துர்ஜயன்	...	K. R. ராம்சிங்
அண்ணு அலங்கார பூபதி	}	K. சாரங்கபாணி
மாமா	...	புளிமூட்டை ராமசாமி அய்யர்
புத்திசாலி	...	K. ஸாயிராமன்
ஸத்யவந்தன்	...	நாட் அண்ணுஜிராவ்
மாலுமி	...	M. K. முஸ்தப்பா
கீர்த்திவர்மன்	...	E. R. சகாதேவன்
காம்போதி	...	C. P. கிட்டன்
வராளி	...	M. R. சந்தானம்
சங்யாசி	...	C. V. V. பந்துலு

இன்னும் பலர்

நடிகைகள் :

மேகலா	...	அஞ்சலிதேவி
ஆதித்தன் கலைமணி சந்திரிகா	}	... மாதுரிதேவி
சிங்காரம்	...	M. S. சிவபாக்கியம்

இன்னும் பலர்

நடனம்—லலிதா & பத்மினி

கன்னியின் காதலி

கதைச் சுருக்கம்

ஸ்வர்ணபுரியின் அரண்மனையில் - அரசன் ஊரில் இல்லாத சமயம் சேனாதிபதி தர்ஜயன் தூரோகியாகி, ராஜபரம்பரையை ஒழித்து இளவரசி சந்திரிகாவை அடைய சூழ்ச்சி செய்கிறான். இளவரசி சந்திரிகாவும் இளவரசன் ஆதித்தனும் ஒரு ஊழியனால் காப்பாற்றப்பட்டு கடல் மார்க்கமாகக் கப்பலில் புறப்படுகின்றனர். சமுத்திரத்தில் பயங்கரமான புயல் படை யெடுத்து கப்பலைத் தாக்கி விடுகிறது.

அண்ணன் ஆதித்தனும் தங்கை சந்திரிகாவும் அலையின் வேகத்தால் பிரிக்கப்படுகின்றனர். ஆதித்தன் ஒரு திசையிலும் சந்திரிகா மறுதிசையிலுமாக வேறு வேறு கரைகளில் ஒதுக்கப் படுகின்றனர்.

அண்ணன் ஆதித்தனும் தங்கை சந்திரிகாவும் உருவத்தில் ஒரே தோற்றம் படைத்தவர்கள். இருவரும் ஒரேமாதிரி உடை உடுத்தினால் யார் அண்ணன், யார் தங்கை என்று கண்டு பிடிப்பது பழகியவர்களுக்கும்கூட கடினமாகிவிடும். அவ்வளவு ஒற்றுமையான உருவம் படைத்தவர்கள்.

கரையோரத்தில் ஒதுக்கப்பட்ட சந்திரிகாவை செம்படவர் கள் காப்பாற்றி சிகிச்சை செய்கிறார்கள்.

செம்படவர்கள் மத்தியில் சிலநாட்கள் வாழ்ந்த சந்திரிகாவுக்கு மற்றும் ஒரு சோதனை வருகிறது. அந்த சோதனையிலிருந்து தப்பவேண்டி அவள் ஒருநாள் தன்னந்தனியாக ஆண் உடை தரித்து வெளியேறுகிறாள். அவள் பிரயாணம் வஸந்தபுரி என்னும் நாட்டிலே கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

வஸந்தபுரி கலைக்கும் கவிதைக்கும் ஆதரவளிக்கும் ஒரு இன்ப நகரம். அந்நாட்டு மன்னன் வஸந்தகுமாரன் சிறந்த கலாரஸிகன். அழகன் ஆண்மையாளன். அவன் நல்ல குணங்களைக் கேள்விப் பட்ட...சந்திரிகா அவன் உதவியைக்கொண்டு தனது தேசத்தை யும் தன் அண்ணனையும் மீண்டும் அடையலாம் என்ற எண்ணத் துடன் அரண்மனையில் ஆஸ்தான பாலகவி உத்யோகத்தைப் பெறு கிறாள். கலைமணி என்னும் புனைபெயருடன் ஆண்பிள்ளையாகவே நடிக்கிறாள். அதோடு அரசனுடைய தூய்மையான தன்மை அவள் பெண்ணிதயத்தைக் கவர்ந்து விடுகிறது.

எல்லாம் நிறைந்திருந்த வேந்தன் வஸந்தகுமாரன் மனதில், நெடுநாளாக ஒரு தீராத ஏக்கம் புகைந்து கொண்டிருந்தது. அந்த துயரத்தின் விவரத்தைக் கலைமணியிடம் கூறுகிறான். ஏக்கத்துக்கு மாற்றமளிக்கும் பொறுப்பையும் கலைமணி வேடத்திலிருக்கும் சந்திரிகாவுக்குத் தருகிறான்.

அந்தப் பொறுப்பின்படி கலைமணி - சந்திரிகா - அவ்வூரில் பிரபல அழகியான கலாவல்லி மேகலாதேவியின் மாளிகைக்கு

அரசனின் காதல் தூதனுக நடக்கும் உத்யோகத்தை ஏற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

தான் காதலிக்கும் ஒரு அரசனுக்காகவே மற்றொரு பெண்ணிடம் காதல் தூது கொண்டு செல்லும் தர்மசங்கடமான நிலைமையை வெகுசாமர்த்தியமாக சமாளிக்கிறாள் சந்திரிகா, கலைமணி என்ற ஆண் வேடத்தில்.

மேகலை ஒரு குழந்தைஉள்ளம் படைத்த கன்னி. கலையில் பூரணம்பெற்ற ஒரு கலைமயில். கவிக்குயில், சகலகலாவல்லி. பெண்களே விரும்பும் புதுவாலிபம் படைத்தவள். அவள் எப்போதுமே கன்னியாகவே வாழ்ந்து தனது அழகையும் கலையையும் காப்பாற்றி வளர்க்க வேண்டுமென்று ஒரு விபரீதத்திட்டம் போட்டிருந்தாள்.

அரசன் காதலை அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆணுருவில் அரசன் தூதனுய் வந்த சந்திரிகாவை, நிஜமான வாலிபன் என்று அரசனைப்போலவே மேகலையும் தவருக நினைத்துவிடுகிறாள். நினைத்ததோடு மட்டும் நில்லாமல் அவள் நெஞ்சிலும் கலைமணிக்கு இடம் கொடுத்து விடுகிறாள். நெஞ்சில் இடம் கொடுத்ததோடு மட்டும் நில்லாமல் கலைமணியை காதல் உறவோடு நெருங்கவும் ஆயத்தமாகி விடுகிறாள்.

ஒரு பெண்ணை மற்றொரு பெண்ணைக் காதலிக்கும் தர்மசங்கடத்துக்குத் தனது ஆண் வேடம் காரணமாகி விட்டதை எண்ணி அதில் இருந்து மீள யோசிக்கிறாள் சந்திரிகா - கலைமணி.

அண்ணனைத் தேட வேண்டிய பாசம் ஒரு புறம். தன் நாட்டை மீட்கவேண்டிய கடமை ஒரு பக்கம். அரசன்மேல் தனக்கேற்பட்ட ப்ரேமை மறுபுறம். தனது ஆண் வேடத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டிய நெருக்கடி வேறுபுறம். இந்த நான்கு பிரச்னைகளையும் சமாளித்து வெற்றிபெறும் திட்டத்தைஆராய்ந்து கொண்டே தனது தனி இருப்பிடத்தில் யோசனையில் ஆழ்ந்திருக்கிறாள்.

அதேசமயத்தில் நெடுநாட்களாக தன் சகோதரியைத்தேடி அலைந்து திரிந்த ஆதித்தன் வஸந்தபுரிக்கு வந்துசேருகிறான். அவ்வூரில் அவன் தன் தங்கையைத்தேடிவரும் சமயத்தில் அந்நகரத்து முக்கியமானவர்கள் எல்லாம் அவனை கலைமணி கலைமணி என்றழைத்து, நெடுநாள் அறிமுகமானவர்கள்போல் கூடமம் விசாரிக்க ஆரம்பித்து விட்டனர். இந்தப் புதுமை அவனுக்குப் புதுக்குழப்பத்தை உற்பத்தி செய்து விட்டது.

எதிர்பாராத விதமாக ஆதித்தன், முன்பு கலைமணி-சந்திரிகா-அடிக்கடியும் தூதுபோய்க் கொண்டிருந்த மேகலையின் மாளிகைக்குகே போய்ச்சேருகிறான்.

ஏற்கனவே மேகலைமேல் விருப்பங்கொண்டு அதற்காகக் காதல் போராட்டத்தைத் தீவிர முற்றுகையுடன் நடத்திவரும்

அலங்கார பூபதியுடன் கைகலக்கும் நிலையும் ஆதித்தனுக்குத்தற் செயலாக ஏற்பட்டு விடுகிறது.

அச்சமயத்தில் மாளிகைக்குள்ளிருந்து கவனித்த மேகலை வெளியே வந்து ஆதித்தனை...பழைய கலைமணி என்ற எண்ணத்தில் வரவேற்று உபசரிக்கிறாள். உபசரிப்பின் வேகத்திலே அவள் உள்ளத்தையும்சேர்த்து ஆதித்தனுக்கு ஊட்டிவிடுகிறாள். ஆதித்தன் ஒரு புதுகனவுலகத்தையும் பூலோகஸ்வர்க்கத்தையும் காணுகிறான்.

கன்னியின் காதலியாவதற்குத் தவித்துக் கொண்டிருந்த மேகலை இப்போது ஒரு வாலிபனின் காதலியாகவே ஆகிவிடுகிறாள் - என்றாலும் குழப்பம் தீர்ந்தபாடில்லை.

நகரெங்கும் அரண்மனை பாலகவியான கலைமணி அரசனுக்காகத் தூது சென்று மேகலையைத் தான் திருடிக்கொண்டான் என்ற பழிச்சொல் பரவ ஆரம்பித்து விட்டது. இந்த வதந்தி அரசன் வஸந்தகுமாரன் காதிலும் விழுகிறது. உடனே கலைமணியைக் கைதிசெய்யும்படி உத்திரவிடுகிறான்.

அரசன் தனியே உலாவப் போகிறான். அச்சமயம், முன்பு தன் தனி இடத்தில் சந்திரிகா - முன்பு குழப்பத்துக்குக் காரணமாயிருந்த கலைமணி - தனது அழகிய பெண்ணுருவில் அமர்ந்து தீவிர யோசனையில் ஆழ்ந்திருக்கிறாள்.

மேகலை தன்னை நிராகரித்த துயரத்தால் எறிக்கப்பட்ட வேல் தன் வஸந்தகுமாரன் விழிகளுக்கு சந்திரிகாவின், வஸந்தத் தென்றல் போன்ற மெல்லிய அழகு ஒரு வசீகரமாகத் தெரிகிறது.

மோடி செய்யும் மேகலையைத் தன் உள்ளத்தில் இருந்து தள்ளிவிட்டு அங்கே அழகும், குணமும், அமைதியும் ஒருங்கே நிறைந்த சந்திரிகாவுக்கு இடமளித்து விடுகிறான்.

சந்திரிகாவின் மனநிலையும் தனக்குச் சாதகமாக இருப்பதை அறிகிறான். சந்திரிகா, தான் கலைமணியின் சகோதரி என்று கூறி தற்காலிகமாக குழப்பத்துக்கு தெளிவு தேடிக்கொள்ளுகிறாள். அரசன் அரண்மனைக்கு போகிறான்.

கலைமணி என்ற நினைப்பில் கைது செய்யப்பட்ட ஆதித்தன் ராஜத்துரோக குற்றத்துக்காக நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறான். விசாரணை மண்டபம் ஒரு விநோத மண்டபமாகிவிடுகிறது. மண்டபம் குழப்பத்தால் கலங்கி தேங்கி நிற்கிறது.

அச்சமயம் மேகலை ஓடிவந்து நியாய மண்டபத்தின் மௌனத்தைக் கலைத்து மன்னன் உட்பட எல்லோரையும் உண்மையைக் காண அழைத்து செல்கிறாள்.

உண்மை எப்படி உதயமாகிறது. என்பதை அறிந்து உங்கள் தீர்ப்பின்படி "கன்னியின் காதலி" யார் என்பதைச் சொல்ல வேண்டி உங்களை அழைக்கிறோம்.

—:O:—

கன்னியின் காதலி...பாட்டு

செம்படவர்கள்

இயற்றியது:-கண்ணதாசன்

மெட்டு:-எம். எம். சுப்பய்யா நாயுடு

ராகம் : தெம்மாங்கு

தாளம் - திஸ்ர ஏகம்

புறப்படுவோமே - அண்ணே - புறப்படுவோமே
கட்டு வலை எடுத்துக் கொண்டு புறப்படுவோமே-பெருங்
கடல் கடந்து மீன் பிடிக்க புறப்படுவோமே - நாம்
(புறப்படுவோமே)

கடல் கடந்து செல்வதற்கு தோணியுமுண்டு
கட்டை சுறு உளுவை மீன்கள் கடலிலே உண்டு
கடவுள் தந்த கைகளிலே முழு பலமுண்டு -
அண்ணே முழுபலமுண்டு
(புறப்)

கட்டு மரம் ஏறிச் செல்வோமே - பெருங்
கடல் கடந்து மீன் பிடிப்போமே - வீண்
கவலையற்று வாழ்ந்திடுவோமே
(புறப்படுவோமே - அண்ணே புறப்படுவோமே)

கைமடக்கி சேவகம்தான் செய்யவும்வேண்டாம்-எஜமான்
கட்டளைக்குக் காத்துக்கிட்டு நிற்கவும் வேண்டாம் -
பைய பைய பேசி பணம் வாங்கவும் வேண்டாம் - சிரமப்
பட்டதற்கு பலனில்லாம ஏங்கவும் வேண்டாம்
(கட்டு மரம் ஏறிச் செல்வோமே)

முப்பது நாள் உழைத்துழைத்துக் குறைப் பணம் வாங்கி
அதை மூன்று நாளில் தீர்த்துவிட்டு கடனையும் வாங்கி
பாக்கி நாளில் பெரும் பகுதி பட்டினியாகி - மனப்
பதறலோட மாரடிக்கும் ஜென்மமும் வேண்டாம்
(கட்டு மரம் ஏறிச் செல்வோமே)

சந்திரிகா

இயற்றியது:-கண்ணதாசன் மெட்டு:-எஸ். எம். சுப்பய்யா நாயுடு

ராகம் : கர்ணாடக தேவகாந்தாரி தாளம் - திஸ்ரம்

தொகையறா

பாயும் அலை கடலே
மாபெரும் பாதகம் செய்து விட்டாய்
ஆயும் குணமுமில்லா தெந்தன் அண்ணனை நீக்கிவிட்
கடலே நீ பெரும் தீங்கிழைத்தாய் [டாய்
அண்ணனை எங்கோ மறைத்து விட்டாய்
ஈரமில்லா நெஞ்சோ கடலே
இன்குண மில்லா யோ

சதுஸ்ரம்

ஆதித்தனை தினமும் விழுங்கியும்
ஆறுதல் பெற்றிலையோ
பேதை யென் சோதரனை
ஆக்கினையோ இறையாய்
அண்ணனைத் தந்துவிடு - அல்லால் என்
ஆயுளை நீக்கி விடு
பெண் பழி பொல்லாதே - அதிலும்
பேதை கண்ணீர் பெரிதே

சந்நியாசி

இயற்றியது:-புதுக்கம்பன் பூமி பாலகதாஸ் மெட்டு:-எஸ். எம். சுப்பய்யா நாயுடு

ராகம் : கரகரப்பிரியா தாளம் - ஆதி

தொகையறா

யோசித்துப் பாராமல் - எதையும் செய்யாதே
செய்தபின் பிழைகண்டு தயங்கி வாடாதே
மனமே சாந்தி பெறுவாயே

பாட்டு

இன்பமும் துன்பமும் இணைந்தது வாழ்வே
இரவும் பகலும் போல் சுழன்று வருமே
அன்பும் அமைதியும் அடைவாய் நீயே

தொகையறா

பிறப்பதும் இறப்பதும் உன் செயலில்லை
சசன் கொடுத்ததுன் உடல் - உயிர் - ஆத்மா
ஏழைகள் துயரம் நீக்கவே சேவை செய்

பாட்டு

வாழ்க்கையில் குறை கண்டு மனம் சலிக்காதே
ஆக்கலும் காத்தலும் அவன் செயலாமே

மேகலா

இயற்றியது:-திரு. சந்தானம் மெட்டு:-ஸ்ரீ. ஆர். சுப்பராமன்

ராகம் : ஹிந்துஸ்தான் காபி தாளம் - ஆதி

ஆசைப்பட்டேன் மச்சான் - உன்மேல்
ஆசைப்பட்டேன் மச்சான் - அரும்பு
மீசையைக்கண்டு - உன்மேலே - மச்சான் (ஆ)

ஆணழகன் நீ தான் - மச்சான்
ஆணழகன் நீ தான் - உன் மேல்
ஆசைப்பட்டேன் நான் - கிட்டே வா...மச்சான் (ஆ)

சாது

இளமை எனும் வலை வீசி எமாற்றித் திரியாதே...
முதுமையிலே அமைதியின்றி முற்றிலும் நீ
அழிந்திடுவாய்

கண்ணுரைக் கண்டு உள்ளம்
காதல் மயமாகினேன்
கண் பார்த்தருளும் ஸ்வாமி ஏழை உம்மை (கண்)

மன்னும் இன்பம் மாசில்லாத பிரேமையே
நறு - மலரில் மனம் போலே வாழ்விலே (மன்)

அன்பில்லாத பொருள் வேண்டேன் வெறும்
அணி பணி யாவும் நான் வேண்டேன் என்
பிரேமை ஜோதி வடிவம் நீயே காதலா - என்றும்
இணை பிரியேன் உம்மை நானே (பிரேமை)

இயற்றியது:-திரு. சந்தானம் மெட்டு:-எல்: எம். சுப்பய்யா நாயுடு

ராகம் : கலப்பு தாளம் - ஆதி

கலையின் பெருமை சொல்லப் போகுமோ - சொல்லப்
போகுமோ

அந்தக் கம்பனுக்கும் - எந்தக் கொம்பனுக்கும்
கற்பனைக் கிருப்பிடமாய் கற்பயன் விளைக்கும் நாய(கலை)

சிலையை வணங்கும் தெய்வம் ஆக்கு மேயடா -
வெரும் - சிலை
அதைச் செய்தவனே தேவருடன் சேர்க்கு மேயடா
உலகத்தையே உருண்டை யாக்கு மேயடா இந்த
முழு-உண்மையுடன் பொய்யை ஒன்றாய் சேர்க்கு
மேயடா

வ - நடை

சீர் மிகும் கலை யாரிடம் மிகச் சிறந்து
விளங்குவது தெரியுமா

—தெரியாதுங்களே—

அழகுத் தெய்வம் நடமாடும் கலைக்கோயில்
பழகு முன்னே என்னைப் பைத்தியமாக்கிய - அந்தப்
பாவை மேகலா தேவியின் தேன் மொழியிலே.....!

பாட்டு

வேல் விழியிலே! அவள் நடையிலே! மின் இடையிலே!
கை வீச்சிலே! பெரு மூச்சிலே! - அவள்
அங்க அசைவிலெல்லாம் கலாரஸம்
பொங்கி வழியுதடா! அவள் அங்க
அவள் கலா தேவி - நான் கலா தேவன்
நான் கலைஞன் - அவள் கலைஞி
எந்தக் காலத்திலும் எமைப் போலொரு ஜோடியைக்
கண்டதுண்டோ உலகினிலே
ஹா.....ஹா.....ஹா.....

கலைமணி

இயற்றியது:-கண்ணதாசன் **மெட்டு:-எஸ். எம். சுப்பய்யா நாயுடு**

ராகம் : இந்துஸ்தான் பியாக் தாளம் - திஸ்ர ஏகம்

கலங்காதிரு மனமே - நீ - கலங்காதிரு மனமே - உன்
கனவெல்லாம் நினைவாகும் - ஒரு தினமே (கலங்)
கடினப் படாமல் ஏதும் கைக்கு வராது
கஷ்டப்படுவார் தம்மை கை நழுவாது
அடுத்தடுத்து முயன்றால் ஆகாததேது ஆகாததேது(கலங்)
ஆண் வாடை கூடாதென்ற அல்லியும் ஒரு நாள்
அர்ஜுனன் வலை தனில் வீழ்ந்தனள் சரியாய் (கலங்)

ஆதி சதுஸ்ரம்

பகட்டுக்காக உம்மைப் பார்க்கவே மறுத்தாலும்
பருவக் காலம் அவளைப் பாடாய்ப் படுத்தி விடும் (கலங்)
அடுத்த கணம் உன்மேல் ஆசையும் வைப்பாள்
ஆஹா ஹா என்று முத்தமும் கொடுப்பாள் (கலங்)

கலைமணி

இயற்றியது:-புதுக்கம்பன் பூமி பாலகதாஸ் மெட்டு:-எஸ். எம். சுப்பய்யா நாயுடு
ராகம் : தேவ்கி தாளம் - ஆதி

கெஜல்

கலைவாணியே நீ எனைச் சோதனை செய்வதும் ஞாயமோ

பாட்டு

கலைவாணியே நீ எனைச் சோதனை செய்வதும் ஞாயமோ
இது தருணம்

கெஜல்

மதிவதன சுந்தரி
உனைக் காண அருள் செய்குவாயே (கலை)

கெஜல்

என் மீதிலே இன்னும் பாராமுகம் ஏனே ஜெகன்
மோகினி (கலை)

கலைமணி

இயற்றியது:-கண்ணதாசன் மெட்டு:-வி. ஆர். சுப்பராமன்
ராகம் : செஞ்சுருட்டி 1. தாளம் - ஆதி

வானத்து முழு மதியோ.....
மானிலத்து ஊர்வசியோ.....
மதிமயக்கும் கற்பனையோ.....
கற்பனையின் முடிவுரையோ.....
சித்திரப் பாவையம்மா - உன் முகம்
சீதக் கமலமம்மா - நீயே (சித்திரப்)
முத்து வரிசை யென்றால் - பற்களை (முத்து)
முல்லை - வாடி வருந்தாதோ அம்மா (சித்திரப்)

கல்யாணி

பத்தரை மாற்றுத் தங்கம் தனையே
பழித்திடும் உன் அங்க மெல்லாம் (சித்திரப்)

கலைமணி

இயற்றியது:-புதுக்கம்பன் பூமி பாலகதாஸ் மெட்டு:-எஸ். எம். சுப்பய்யா நாயுடு

ராகம் : பியாக் தாளம் - ஆதி

பெண் மனம் ஓர் நிலை நில்லாது - அந்த
மன்மத பாணம் பொல்லாது (பெண்மனம்)

பேர் பெறும் ஞானிகள் தேவர்கள் மூவர்கள்
யாவரும் காமனின் மாய்கையில் வீழ்ந்தனர்(பெண்மனம்)

வெண் மதி மண்டலம் மேவி நீ இருந்தாலும்
வீர வைராக்கிய விரதம் நீ புரிந்தாலும்
கடலுக்குள் அரண் கட்டி கன்னி நீ மறைந்தாலும்
உடலுக்குள்ளேமாரன்உதயமாவது திண்ணம்-பெண்ணே
உடலுக்குள்ளே மாரன் உதயமாவது திண்ணம்-
(பெண்மனம்)

வீணைகப் பிடிவாதம் செய்யாதே சும்மா
வாளேவிருதாவில் கழிக்காதே அம்மா
ஏகாந்த வாழ்க்கையை எண்ணுதே சதமா
இறுதியில் அவமானம் அடைவாய் நீ தகுமா
(பெண்மனம்)

இயற்றியது:-கண்ணதாசன் மெட்டு:-வி. ஆர். சுப்பராமன்

ராகம் : மாண்டு தாளம் - ஆதி

காரணம் தெரியாமல் உள்ளம் சந்தோஷம் கொண்டாடுதே
லலல் லலல் லலல் லல
காரணம் தெரியாமல் உள்ளம் சந்தோஷம் கொண்டாடுதே
லலலல லலல லல
காரணம் தெரியாமல் உள்ளம் சந்தோஷம் கொண்டாடுதே
லலல் லலல் லலல் லல

மணமலர் போலே வாழ்வினிலே
பேரின்பமதே அடைந்தேனே நானே
மணமலர் போலே வாழ்வினிலே
பேரின்பமதே அடைந்தேனே நானே
காண்பவை யாவும் காவியம் போல்
இன்றே ஆனந்தம் - ஆ - ஆனந்தம்

கானத்திலே குயில் போலே ஆ - ஆ - ஆனந்தம்
வானத்திலே ஒளி போலே ஆனந்தம் - காவினிலே
காவினிலே மயில் போலே ஆ - ஆ - ஆனந்தம்
கானத்திலே குயில் போலே
காண்பவை யாவும் காவியம் போல்
இன்றே ஆனந்தம் - ஆ - ஆனந்தம்
கனவும் நினைவும் யாவுமே புதுமையாகக் காணுதே
கனவும் நினைவும் யாவுமே புதுமையாகக் காணுதே
இது என்?

காதல் என்பதிது தானே - மனம் மாறியதேனே
காரணம் தெரியாமல் உள்ளம் சந்தோஷம்
கொண்டாடுதே... !

கலைமணி

இயற்றியது:-கண்ணதாசன் மெட்டு:-எம். எம். சுப்பய்யா நாயுடு
ராகம் : காபி தாளம் - ஆதி

கண்டேனையா - மதிமுகம் - கண்டேனையா
பூரண மதிமுகம் கண்டேனையா - அதில்
அவ மதிப்பும் கலந்திருக்கக் கண்டேனையா - நான்
திஸ்ரம்: உண்மையைச் சொன்னேனையா

சதுஸ்ரம்

கண்டேனையா - விழிச் சுடரைக் - கண்டேனையா-
சுட்டும் விழிச் சுடரைக் கண்டேனையா - அதில்
கொட்டும் சுடு நெருப்பின்
கொடுமையும் சேர்ந்திருக்கக் கண்டேனையா - நான்
திஸ்ரம்: உண்மையைச் சொன்னேனையா -

சதுஸ்ரம்

கண்டேனையா - இதழிரண்டைக் - கண்டேனையா
மது ஊறும் - இதழிரண்டைக் - கண்டேனையா -
அதிலே
விஷ மதுவும் கலந்திருக்கக் கண்டேனையா - நான்
திஸ்ரம்: உண்மையைச் சொன்னேனையா

சதுஸ்ரம்

கண்டேனையா - அவளின் அலங்காரமான
நடையைக் கண்டேனையா - அன்னம் போல்

அலங்காரமான நடையைக் கண்டேனையா - அதனில்
அகங்காரமும் கமழ்ந்திருப்பதைக் கண்டேனையா -
நான்

திஸ்ரம்: உன்மையைச் சொன்னேனையா
கேட்டேனையா - கொஞ்சும் குரல்தனைக் -
கேட்டேனையா - கிளிபோல்
கொஞ்சும் குரல் தனைக் கேட்டேனையா - பணிவு
கொஞ்சமுமில்லாத குரல்தனைக் கேட்டேனையா -
நான்

உண்மையைச் சொன்னேனையா

சந்திகா

இயற்றியது:-கண்ணதாசன் **மெட்டு:-எஸ். எம். சுப்பய்யா நாயுடு**

ராகம் : இந்துஸ்தான் தோடி தாளம் - ஆதி

வானின் மதி போல் மேவும் வாழ்வே நிகரே
இல்லாததே - மெய்
எந்நாளும் மகிழ்வே தருமே - பாரில் - நீ - காண்
கார்முகில் போலே அலையும் வாழ்வே
நில்லாது நிலையே வீணே
சோர்வு மிகுமே மானே, பாரில் - நீ - காண் (வானி)

சாகஸமே தகுமோ புவிமேல்
நேர் வழியே உயர்வாம் நிதமே
வேதனை மிகுமே சுவை கெடுமே
பொய் வாழ்வால் மனம் புண்படுமே பாரில் - நீ - காண்
(வானி)

இயற்றியது:-கண்ணதாசன் **மெட்டு:-எஸ். ஆர். சுப்பராமன்**

ராகம் : டோலி பாட்டு தாளம் - ஆதி

மேகலா:—

புவி ராஜா — என் ஆருயிர் ஜோதியே
பிரியாமல் நாமே காதல் வாழ்விலே - என்றுமே (புவி)

அலைகடல் சேர்வான் போல் மகிழ்வோம்
நாமே பார்மேல் சடிலா காதலர் (புவி)

ஆதித்தன்:—

விலை ஆகாத பொருள் போல் நானே புவி மேல்
நாடோடி ஏழையம்மா உயர்

ராணியின் காதலே நான் வீணை நாடிநூல்
கை கூடுமோ (புவி)

இராகம் : துர்க்கா தாளம் - ஆதி

மேகலா:—

ஏழையும் உயர்வும் தாழ்மையும்
மாசிலாக் காதலுக்குண்டோ

ஆதித்தன்:—

இன்பத் தேனுண்ணும் ராஜ குமாரி
துன்பத்தை நாடு வையோ

இராகம் : சாரங்கா தாளம் - ஆதி

மேகலா:—

மகிழ்வுடன் ஏற்பேனே
மதுவெனச் சுவைப்பேனே

ஆதித்தன் :—

மரணம் நேர்ந்திடிலோ

மேகலா :—

வானுலகில் ஒன்று சேர்வோமே (புவி)

மேகலா

இயற்றியது:-புதுக்கம்பன் பூமி பாலகதாஸ் மெட்டு:-ஸ்ரீ. ஆர். சுப்பராமன்

ராகம் : பாகேஸ்வரி தாளம் - ஆதி

நானே என்னதான் செய்குவேன் நலம் இழந்த
பெண் ஆனேன்
ஹா!.....இனி (நா)

அறிவும் அழகும் சிறந்தோன் உறவில்
அருமை மாறன் போன்றே
பொருமை என் உயிர்க் காதலன்
பெருந் தண்டனை அடைந்தானே
கலைக்கே பிறந்தான் கவிதை என்னென்பே
இனிமைச் சொல் மறப்பேனே - கலை
ஞாயமே கவனிப்பார் உலகில் அறிதுதான் அந்தோ
பொருமை -
விதி என்பேனே வினை என்பேனே விஷயந்
தெரிகிலேன்
விசனத்தாலே வாடினேன் கடவுள் சித்தம் இதாமோ

டான்ஸ் பாட்டு—(பின்னணி)

இராகமாலிகை

இயற்றியது:-புதுக்கம்பன் பூமி பாலகதாஸ் மெட்டு:-எஸ். எம். சுப்பய்யா நாயுடு

ராகம் : பூபாளம் தாளம் - ஆதி

காலையிலே.....

ராகம் : பிலஹரி தாளம் - ரூபகம்

கதிரவன் வரும் வேளையிலே.....

ராகம் : ஆனந்த பைரவி தாளம் - ஜம்பை

கார்வண்டு ஒன்று பறந்து வருகையிலே.....

ராகம் : கேதார கௌளை தாளம் - திரிபுடை

சோலை தனிலே தூய மலர் பல கண்டு.....
சோர்வு நீங்கி ராகம் பாடி.....

ராகம் : காபி தாளம் - திஸ்ர ஏகம்

ஆனந்தம் கொண்டு
ஆடி ஓய்யாரமாய் ஓடி உல்லாசமாய்.....

ராகம் : சாருகேஷி தாளம் - கண்டஜாதி திரிபுடை

மது மிக அருந்தவே
நிலையில் மதி .....

ராகம் : மோ[illegible] தாளம் - மிஸ்ர ஜாதி திரிபுடை

[illegible]னை நெருங்கி சிக்கியதே.....

தாளம் - ஆதி

[illegible] ராஜா—
[illegible]ன் சுகந்தை தெளிந்தே
வலையை விட்டகன்றே - நேரே
மகிழ்ந்தே பறந்ததே

Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Mannady Madras